RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22227

OPEN ACCESS

# கோட்பாட்டு நோக்கில் வ.வே.சு. ஐயர், புதுமைப்பித்தன், நாஞ்சில் நாடன், சுப்ரபாரதிமணியன் போன்றோரின் சிறுகதைகள்

**நா. தீபா சரவணன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கோவை-641044, தமிழ்நாடு, இந்தியா.

# V.V.S. Aiyar, Pudhumaipithan, Nanjil Nadan, Subrabharathimanian's in Short stories from a theoretical point of view

**N. Deepa Saravanan [a, *]**

[a] Department of Tamil, Sri Ramakrishna College of Arts & Science for Women, Coimbatore-641044, Tamil Nadu, India.

* Corresponding Author: deepatamil@srcw.ac.in

Received: 25-02-2022
Revised: 08-04-2022
Accepted: 13-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

Theory refers to the thought that is based on in-depth research and based on knowledge. One has to explore any one theory in many cultural contexts and see if that theory applies to many cultures. Contemporary literary forms such as novels, short stories, revival poetry and plays express the community life of millions of people. Modern writers, with their broad outlook on society, use a variety of techniques to bring about tremendous change in the creative field. Some of the theoretical ideas mentioned in the stories of some of the short story personalities need to be explored. Creators create works with a story in mind. When stories are created with a societal perspective it transforms into a success for society.

**Keywords:** V.V.S. Aiyar, Pudhumaipithan, Nanjil Nadan, Subrabharathimanian, Short Stories

## முன்னுரை

கோட்பாடு என்பது ஆழ்ந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டதும், அறிவு சார்ந்ததுமான சிந்தனையைக் குறிக்கும். கோட்பாடு என்னும் சொல்லுக்குத் தற்காலத்தில் வழங்கும் சொற்பொருள்கள் சில அதன் ஊகம் சார்ந்த தன்மையையும், பொதுமைப்படுத்தும் பண்பையும் குறித்துக் காட்டுகின்றன. இவ்வகைக் கோட்பாடுகள் இலக்கியங்களில் பொருந்தியுள்ள அமைப்பு முறை குறித்து வ.வே.சு. ஐயர், புதுமைப்பித்தன், நாஞ்சில் நாடன், சுப்ரபாரதிமணியன் போன்றோரின் சில சிறுகதைகள் வழி ஆராயலாம்.

கலைகளிலும், இலக்கியங்களிலும் "கோட்பாட்டு" அல்லது "கோட்பாடு சார்ந்த" பயன்பாடுகள், விரைவில் அளந்தறிய முடியாத எண்ணக்கருக்களையும், பட்டறிவு சார்ந்த தோற்றப்பாடுகளையும் குறிப்பதற்குப் பயன்படுகின்றன.

20-ஆம் நூற்றாண்டில் அமைப்பியல் வாதம், பண்பாட்டியல் கோட்பாடு, சூழலியல் கோட்பாடு, நிகழ்த்துதல் கோட்பாடு முதலியன வழிகாட்டிகளாக அமைந்தன. 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலக்கியம் மற்றும் சமூக அறிவியல் புலங்களில் வளமடைந்த பின்நவீனத்துவம், குறியியல், பொருள் கோடலியல், உளவியல் போன்ற கோட்பாடுகள் தோன்றின.

நாம் மேற்கொள்ளும் கோட்பாடுகளில் எதை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் அவ்வாய்வு ஒரு குறிப்பிட்ட பண்பாட்டிற்குள் சுருங்கிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, எந்த ஒரு கோட்பாட்டையும் பல பண்பாட்டுச் சூழல்களிலும் ஆராய்ந்து அக்கோட்பாடு பல பண்பாடுகளுக்கும் பொருந்துகிறதா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பொருத்தமாக அமைந்தால்தான் அக்கோட்பாடு உலகளாவிய பயன்பாட்டைக் கொண்டதாகக் கருதப்படும். கோட்பாடு வெற்றி பெற வேண்டும் என்றால் அதில் நம்பகமானத் தரவுகள், ஆழமான பகுப்பாய்வு, அறிவுப் பூர்வமான அல்லது தர்க்கப் பூர்வமான விவாதங்கள், பல பண்பாடுகளுக்கும் பொருந்தும் தன்மை போன்றவைகள் இருப்பது முக்கியம் ஆகும்.

## நடப்பியல் கொள்கைகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்கால இலக்கியங்களின் பாடுபொருள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். முற்காலங்களில் மன்னன் இறைவன் என்ற நிலையிலேயே பெரும்பான்மையான இலக்கியங்கள் எழுதப்பெற்றன.

புதினம், சிறுகதை, புதுக்கவிதை, நாடகம் போன்ற இக்கால இலக்கிய வடிவங்கள் கோடான கோடி பொதுமக்களின் சமுதாயம் வாழ்க்கை போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற நோக்கில் நம் பழைய இலக்கியங்கள் எழுந்ததால் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கை முறையை நாம் அறிய முடியாமல் போய்விட்டது. புகழ் பாடி வந்த மன்னர் இலக்கியங்களினின்றும் முற்றிலும் மாறுபட்டவை இக்கால இலக்கியங்கள். இக்கால இலக்கியங்கள் சமூகத்தில் நடைபெறும் செயல்களுக்குக் காரண காரியங்களையும், தீர்ப்பையும், காட்சிப்படுத்துகின்றன.

நவீன எழுத்தாளர்கள் சமுதாயத்தின் மீதுள்ள விசாலப்பார்வையால் பல உத்திகளைக் கையாண்டு மிகப்பெரும் மாற்றத்தை படைப்புலகத்தில் ஏற்படுத்துகின்றனர்.

## சிறுகதை

இக்கால இலக்கிய வகைகளுள் விரைவாக வளர்ந்து வரும் ஒரு இலக்கியவடிவம் சிறுகதை ஆகும். சிறுமை + கதை சிறுகதை எனவே அளவில் சிறியதாக இருக்க வேண்டும். 'கதைக்கப்படுவது கதை' என பல கருத்துகள் உள்ளன.

சிறுகதைக்குரிய இலக்கணம் பற்றி பலரும் விளக்கம் கூறியுள்ளபோதும் இதுதான் சிறுகதையின் முடிந்த முடிவான இலக்கண அமைப்பு என்று எவரும் வரையறுத்துக்கூறவில்லை. இதற்குக் காரணம் அது நாள்தோறும் உருவத்திலும் உத்திமுறையிலும் புதியன பெற்று வளர்ந்து வருகிறது. எனினும் சில இலக்கிய அறிஞர்கள் முன்வைத்துள்ள விளக்கங்களின் துணையால் சிறுகதையின் தன்மையினை ஓரளவு உணரலாம்.

புதினம், குறும்புதினம் ஆகியவற்றிலிருந்து அதன் செறிவாலும் அழுத்தத்தாலும் வேறுபட்டு விளங்கும். உரைநடையாலாகிய புனைகதைகளையே இக்காலத்தில் சிறுகதை என்று சுட்டுகின்றனர். உலகப் புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர் 'எட்கர் ஆலன்போ' என்பவர் "சிறுகதையாவது அரை மணி நேரத்துக்குள் படித்துணரக்கூடிய உரையில் கூறப்படும் கதையாகும்" என்கிறார் (Kesavan Sornam 2010).

இக்கால இலக்கிய வகைகளுள் விரைவாக வளர்ந்து வரும் ஒரு இலக்கியவடிவம் சிறுகதை ஆகும். "எடுப்பான தொடக்கம், மிடுக்கான ஓட்டம் மனதில் நிற்கும் முடிவு ஆகியவையே ஒரு நல்ல சிறுகதையின் அங்கங்கள்" என்கிறார் கேசவன் சொர்ணம். (Kesavan Sornam 2010)

கதாசிரியர்கள் கோட்பாடுகளை முன்னிறுத்தி கதைகளை படைக்கிறார்களோ இல்லையோ அவர்களின் படைப்புகளின் வழி வெளிப்படும் கோட்பாடுகள் சமூகத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திவிடும் என்பது உறுதி. அவ்வகையில் சிறுகதை ஆளுமைகளில் சிலரின் கதைகளில் குறிப்பிடப்படும் சில கோட்பாட்டு சிந்தனைகள் மட்டுமே இங்கு குறிப்பிடப்படுகின்றன.

## வ.வே. சு ஐயரின் சிறுகதையில் உளவியல் கோட்பாடு

தமிழ்ச்சிறுகதையின் முதல் சிறுகதை வ.வே. சு ஐயரின் குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை. அக்கதையில் பெண்ணின் மன உளவியலை அழகுற படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் ஆசிரியர். இக்கதையில் நாகராஜனுக்கு, முதல் மனைவி ருக்மணியை விடுத்து வேறொரு பெண்ணை திருமணம் செய்ய ஏற்பாடு செய்கின்றனர். திருமணம் வரை போனபிறகு அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கலாமென்று திட்டமிடுகிறான் நாகராஜன். ஆனால் தான் நம்பிவந்த கணவனே தன்னை கைவிட்டுவிட்டால் வேறு கதியில்லை என்று தனது உயிரை மாய்த்துக்கொள்கிறாள் ருக்மணி. உண்மையில் உறுதியானப் பெண்களாக இருந்தாலும் நம்பிக்கை துரோகம் என்று வரும்போது அதுவும் மிகுந்த அன்பு கொண்டவரே செய்யும் நம்பிக்கை துரோகம் அவர்களை பலவீனப்படுத்திவிடும். எதிர்த்து நிற்க வேண்டிய ருக்மணி தற்கொலை என்ற கோழைத்தனமான முடிவை எடுக்கிறாள். இங்கு மன உளைச்சல் அவர்களை சிந்தித்து செயலாற்ற விடுவதில்லை என்ற உளவியலை கோட்பாடகக் கொண்டு அக்கோட்பாட்டின் அடிப்படையில் கதையை வடிவமைத்திருக்கிறார் ஆசிரியர்.

“குழந்தைகளே பெண்கள் மனது நோகும்படி ஏதாவது செய்யத்தோணும்போது இனிமேல் இந்தக் கதையை நினைத்துப் பார்த்துக்கொள்ளுங்கள். விளையாட்டுக்காகக் கூடப் பெண்ணாய்ப் பிறந்தவர்களின் மனதைக் கசக்கவேண்டாம். எந்த விளையாட்டு என்ன வினைக்குக் கொண்டு விடும் என்று யாரால் சொல்லமுடியும்?” என அழகுற முடித்திருப்பார். (Editoral Board, 2020)

## புதுமைப்பித்தன் சிறுகதைகளில் சாதிப்பிரச்சனை

‘சாதிகள் இல்லையடி பாப்பா’ என பாரதி என்றோ பாடினாலும் சமுதாயத்தில் சாதிகளின் அடக்குமுறையும், உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற பாகுபாடும் என்றும் நிலவிக்கொண்டுதானிருக்கின்றன. இலக்கியங்கள் அவ்வக்கால சமுதாயத்தை படம்பிடித்துக்காட்டும் காலக்கண்ணாடியெனில் சிறுகதைகள் நடப்பியலை நேரடி ஒளிபரப்பு செய்பவையாகத் திகழ்கின்றன என்பதை புதுமைப்பித்தன் கதைகள் வழி அறியலாம்.

‘கடவுளின் பிரதிநிதி’ என்ற கதையில் பிராமணன் ஒருவன் ஹரிஜன மக்களும் கோயிலுக்குள் சென்று வழிபட வேண்டும் என்று போராடுகிறான். அதை மறைமுகமாக மறுக்கிறார் மற்றொரு பிராமணரான கோயில் பூசாரி. பிராமண சமுதாயத்தை உயர்வாகக் கருதிவரும் கீழ்ச்சாதியினர் தங்களுக்காக ஒருவன் போராடுவதையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தாழ்ந்த சாதியினருக்காகப் போராட எண்ணும் சங்கரை அவர்களே மறைந்திருந்து கல்லால் தாக்குகின்றனர். இறுதியில் ‘கடவுளே நீ உண்மையா?’ என யதார்த்த பிரதிபலிப்புடன் முடிகிறது கதை.

‘புதிய நந்தன்’ என்ற கதையில் நந்தன் என்பவன் புரட்சிக்காக தன்பெயரையும் மதத்தையும் மாற்றுகிறான். ராமநாதன் பறச்சிஇனத்தைச் சார்ந்த கருப்பன் மகளைத் திருமணம் செய்ய நினைத்தான். கருப்பனிடம் பெண்கேட்கிறான்.

“அது நயிந்தோ மகாப்பாவம் கண்ணாணே அப்படிச்சய்யக்கூடாது” என்றான் கருப்பன். இறுதியில் சாதிக்கலவரமாயிற்று இதை

‘ஹதம், ரத்தக்களரி’

மூவரின் ரத்தங்கள் ஒன்றாய் கலந்தன. ஒன்றாய்த்தான் இருக்கின்றன.

’இதில் யாரை நந்தன் என்பது?’ (Mohan, 2016)

என விளக்கியுள்ளார் ஆசிரியர். இது இன்றைய நடப்பியல் சமூகத்தை அழகுற படம்பிடித்துக் காட்டுகின்றது. இன்றும் உயர்சாதி பெண்ணோ ஆணோ தாழ்ந்த சாதியான ஆணையோ பெண்ணையோ விரும்புவது சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத விஷயமாகவே உள்ளது.

இவ்விரு கதைகளிலும் சாதிப்பிரச்சனை மையக்கருவாக விளங்குகின்றது. சாதிப்பிரச்சனை, சாதிக்கலவரம், மேல்சாதி, கீழ்ச்சாதி பாகுபாடு போன்றவை காலங்காலமாக சமுதாயத்தில் நிலவி

வருகின்ற ஒன்றாகும். சமகால நிகழ்வுகளை கதையில் குறிப்பிடுவதன் வழி நடப்பியல் கோட்பாட்டை அழகுற எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

## நாஞ்சில் நாடன் கதைகளில் எதிர்கால முற்போக்குச் சிந்தனை

இலக்கியங்கள் காலக்கண்ணாடியாகவும், வரலாற்றுச் சான்றாதாரங் களாகவும் விளங்குவது போலவே சமூகத்தைச் சீர்திருத்தும் முக்கியப்பங்கும் அதற்கு உண்டு. சாதிகளையும், அடிமை வேலை முறையையும், விவசாயிகளின் அவலத்தையும் படைப்புகள் வழி அழகுறக் கையாள்கிறார் ஆசிரியர். பல கதைகளில் பல அவலங்களை எதிர்க்கும் ஆசிரியர் 'கும்பமுனி' என்கின்ற தனது பிரதிபிம்பம் வழியாக இன்றைய சமூகத்தின் இழிவுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

'தேர்தல் ஆணையத்துக்கு திறந்தவெளிக்கடிதம்' என்ற கதையில் இன்றைய தேர்தலில் நடக்கும் முறைகேடுகளை சுட்டிக்காண்பிக்கும் விதத்தில் கும்பமுனி சில பரிந்துரைகளை முன் வைத்து ஒரு கடிதம் எழுதுகிறார்.

'வேட்பு மனுவில் தேவையற்ற வினாக்களைத் தவிர்க்கலாம். வேட்பு மனுக் கட்டணத்தை உயர்த்தலாம். தன் பிள்ளைகளுக்குத் தமிழில் பெயர் வைத்தவர்களுக்கு முன்னுரிமை தரலாம். தேர்தலின் போது வேறு எங்காவது செல்பவர்களுக்குக் கடவுச்சீட்டுத்தரலாம். என்ற கருத்துக்களை எல்லாம் முன்வைத்து ஓட்டுப்போடுவதற்காகப் பணம் கொடுப்பது கள்ள ஓட்டு நபர்களின் பட்டியல் தயாரிப்பது. காவலர்களின் அடக்குமுறை, இலவசப்பொருள்களுக்காக மக்கள் எதற்கும் துணிவது. உண்மையைக்கூறினால் ஏற்படும் கலவரங்கள், விளைவுகள் போன்றவைக் குறித்தும் நைய்யாண்டி கலந்து கூறுகிறார். இப்பரிந்துரைகள் அரசியலின் அவலத்தையும் மாற்றமுடியாத அதன் போக்கையும் படம் பிடித்துக்காட்டுகின்றன.

இவை போன்று அரசியல் போக்குகளையும் அவலங்களையும் புதிய கோணங்களில் எடுத்துரைப்பது வழி ஆசிரியர் சூழலியல் கோட்பாட்டை அழகுறக் கையாண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது.

## சுப்ரபாரதி மணியன் சிறுகதையில் நவீனக் கோட்பாடு

திருப்பூரைச் சேர்ந்த சிறந்த சிறுகதை ஆசிரியரான சுப்ரபாரதிமணியன் அவர்களின் சிறுகதைகளில் ஒன்று 'நவீனம்'. இக்கதை வழி பழமையின் மகிமையையும் நெசவுத் தொழிலின் மேன்மையையும் அழகாக எழுத்துரைக்கிறார். நெசவுத்தொழில் செய்து சாதாரண வாழ்க்கை நடத்துகின்ற ஒரு குடும்பம். அவர்கள் குடும்பத்தில் சமைப்பதற்காக குக்கர் வாங்கப்படுகிறது. அதை விறகு அடுப்பை பயன்படுத்தி கஞ்சி வடித்து பயன்படுத்தும் மக்கள் அசாதாரணமாக பார்க்கின்றனர். குக்கரில் சமையல் செய்யும் முறை அழகுற விவரிக்கப்படுகிறது. மண் மணம் மாறா மண்சமையலுக்கு பழகிப்போன கிராமமக்கள் குக்கர் சமையலை அபூர்வமாக ரசிக்கின்றனர். ஆனால் நெசவுத்தொழில் வாழ்க்கையாகிப் போனதால் வடித்தக்கஞ்சி பாவுகாய்ச்சுவதற்காக தேவைப்படுகிறது. குக்கரில் சாதம் வைத்தால் கஞ்சிக்காக ஒவ்வொருவரிடம் கேட்க வேண்டியிருக்கிறது. இதனால் தொழிலை சரிவர செய்ய முடியாமல் சிரமப்படுகின்றனர் அக்குடும்பத்தார்.

இருக்கட்டும். இருக்கட்டும் நா நெசவுத் தொழிலிருந்து வேற தொழிலுக்கு மாறப்போ பிரயோஜனப்படாதா இந்த குக்கர். தலைமுறை தலைமுறையா

நெசவுக் குழிக்குள்ளியா இருக்கப்போறோம்." (Editoral Board, 2020)

என்ற எண்ண ஓட்டங்களுடன் முடிகிறது கதை. இங்கு நெசவாளர்களின் இறுக்கமான மனச்சூழலில் போதிய வருமானமின்மை அத்தொழிலை விடமுடியாமல் அவர்கள் படும் வேதனை போன்றவை கதையின் மையக்கருவாக விளங்குகின்றன. இக்கதையின் குக்கர் அவர்களுக்குத்தே;வாயன ஒன்றாக உள்ளது. ஆனால் தொழில் அவர்களை அதை ஏற்க விடாமல் தடுக்கிறது. இங்கு பரிணாம வளர்ச்சிமாற்றக் கோட்பாட்டை புகுத்துகிறார் ஆசிரியர்.

## முடிவுரை

கோட்பாடு என்பது ஆழ்ந்த ஆராய்ச்சியின் அடிப்படையிலான மற்றும் அறிவின் அடிப்படையிலான சிந்தனையைக் குறிக்கிறது. எந்த ஒரு கோட்பாட்டையும் பல கலாச்சார சூழல்களில் ஆராய்ந்து அந்த கோட்பாடு பல கலாச்சாரங்களுக்கு பொருந்துமா என்று பார்க்க வேண்டும். நாவல்கள், சிறுகதைகள், மறுமலர்ச்சிக் கவிதைகள் மற்றும் நாடகங்கள் போன்ற சமகால இலக்கிய வடிவங்கள் மில்லியன் கணக்கான மக்களின் சமூக வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன. நவீன எழுத்தாளர்கள், சமூகத்தைப் பற்றிய பரந்த கண்ணோட்டத்துடன், படைப்புத் துறையில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவர பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர். சிறுகதை ஆளுமைகள் சிலரின் கதைகளில் குறிப்பிடப்படும் சில தத்துவார்த்தக் கருத்துக்கள் ஆராயப்பட வேண்டியவை. சமூகக் கண்ணோட்டத்துடன் கதைகள் உருவாக்கப்படும்போது அது சமூகத்தின் வெற்றியாக மாறுகிறது. இங்ஙனம் வ.வே.சு.ஐயர், புதுமைப்பித்தன், நாஞ்சில் நாடன், சுப்ரபாரதிமணியன் போன்ற படைப்பாளிகள் ஏதேனும் ஒரு கதைக்கருவை மனதில் வைத்தே படைப்புகளை படைக்கின்றனர். கதைக்கருக்கள் சமுதாயக் கண்ணோட்டத்தோடு படைக்கப்பட்டு வெற்றியடையும்போது அது சமுதாயத்தின் வெற்றியாக உருமாறுகிறது.

## References

Balasubramaniam, S., (2000) Tamil Ilakkiya Varalaru, Narumala Pathippagam, Chennai, India.

Editoral Board, (2020) Thernthetukkappatta Sirukathaigal, New Century Book House, Chennai, India.

Jayam, A., Chandralegha, V., (1997) Tamil Ilakkiya Varalaru, Janaka Publishers, Chennai, India.

Kesavan Sornam, (2010) Arignar Anna - Maapasaan Kathaikal- Oppaivu, International Institute of Tamil Studies, Tharamani, Chennai, India.

Mohan, C., (2016) Pudhumaipithan Sirukathaigal, Annam - Agaram Pathippagam, Chennai, India.

Nanjil Nadan, (2006) Nanjil Nadan Sirukathaigal, Tamizhini Pathippagam, Chennai, India.

Prapanchan, (2008) Therndhedukkapatta Sirukathaigal, Aazhi Publishers, Chennai, India.

Pudhumaipithan, (1976) Pudhumaipithan Sirukathaigal, National Book Trust, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License